**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 11** **நாள் : 11.01.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 71 மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப்பாதைகளில் இன்று தீவிரத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.**

**தீவிரத் தூய்மைப் பணிகளில் 305 மெட்ரிக் டன் குப்பைகள் மற்றும் கட்டடக் கழிவுகளும், 1072 சுவரொட்டிகள் மற்றும் பேனர்களும் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு, சராசரியா 5900 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் தூய்மையாகவும், சுகாதாரமாகவும் திகழ்ந்திடும் வகையில் தீவிரத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அனைத்து போக்குவரத்து மற்றும் உட்புறச் சாலைகளில் 38.87 மெட்ரிக் டன் திடக்கழிவுகள், 3,954 சுவரொட்டிகள் மற்றும் அனுமதியின்றி வைக்கப்பட்ட 120 விளம்பரப் பதாகைகள், பேருந்து நிறுத்தங்களில் 134.57 மெட்ரிக் டன் திடக்கழிவுகள், 8,175 சுவரொட்டிகள் மற்றும் அனுமதியின்றி வைக்கப்பட்ட 167 விளம்பரப் பதாகைகள், பூங்காக்களில் 7877.05 மெட்ரிக் டன் திடக்கழிவுகள், மயானபூமிகளில் 159.16 மெட்ரிக் டன் திடக்கழிவுகள், 666 சுவரொட்டிகள் மற்றும் விளம்பரப் பதாகைகள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 71 மேம்பாலங்கள், மேம்பாலங்களின் கீழ் உள்ள பகுதிகள் மற்றும் சுரங்கப்பாதைகளில் உள்ள குப்பைகள், கட்டடக் கழிவுகள், பேனர்கள், சுவரொட்டிகள், புற்கள் மற்றும் புதர்ச் செடிகள், பயனற்ற பொருட்களை அகற்றி சுத்தம் செய்யும் வகையில் இன்று (11.01.2025) தீவிரத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பணிகளில் 1180 தூய்மைப் பணியாளர்களைக் கொண்டும்,332 இயந்திரங்கள் மற்றும் வாகனங்களை கொண்டும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள கிண்டி கத்திப்பாரா மேம்பாலம், கோடம்பாக்கம் மேம்பாலம், அண்ணா மேம்பாலம், போரூர் சந்திப்பு மேம்பாலம், பெரம்பூர் முரசொலி மாறன் மேம்பாலம், பாடி மேம்பாலம், அடையாறு எல்,பி சாலை மேம்பாலம், வடபழனி மேம்பாலம், மேட்லி சுரங்கப்பாதை, கெங்கு ரெட்டி சுரங்கப்பாதை , அரங்கநாதன் சாலை சுரங்கப்பாதை, வில்லிவாக்கம் சுரங்கப்பாதை, ஹாரிங்டன் சாலை சுரங்கப்பாதை உள்ளிட்ட 71 மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப்பாதைகளில் இன்று தீவிரத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தீவிரத் தூய்மைப் பணிகளில் 305 மெட்ரிக் டன் குப்பைகள் மற்றும் கட்டடக் கழிவுகளும், 1072 சுவரொட்டிகள் மற்றும் பேனர்களும் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது. இந்தப் பணிகளின் போது, பாலங்களில் உள்ள சிறு சிறு பழுதுகள் மற்றும் எரியாத தெருவிளக்குகள் கணக்கீடு செய்யப்பட்டு, அதனை சரிசெய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**